09.01.2026
O.S.No. 250/2020
DW1–பகவதியப்பன் – த/பெ. திருமலையப்பபிள்ளை
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.01.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. வாதியின் தந்தையும், எனதுதந்தையும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரியல்ல. வாதியின் தந்தை முதல்தாரத்து மகன், எனதுதந்தை இரண்டாவது தாரத்தின் மகன். வாதி மற்றும் எனது தாத்தாவின் பெயர் குத்தாலிங்கம் பிள்ளை என்றால் சரிதான். சர்வே எண்.383/6 , 383/9 கிழமேல் 28 அடி தென்வடல் 66 அடி உள்ள இடத்தில் வாதியின் வீடு, தகரசெட் உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட சர்வே எண்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் வாதியின் தந்தையின் தாய்வழி தாத்தா சுப்பிரமணியபிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும்.

2. 1953ம் ஆண்டே மேற்கண்ட சர்வே எண்களை சுப்பிரமணியபிள்ளை என்பவர், வாதியின் தந்தைக்கு பதிவு செய்த ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 1953 ஆவணத்தில் எனது தந்தை சாட்சி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

3. மேற்குறிப்பிட்ட தென்வடல் 66 அடியில் 3 அடி தெற்கே விட்டுவிட்டு 63 அடியில் சுவர் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சுவருடன் வாதிகளின் எல்லை முடிகிறது. வாதி கூறுவதுபோல் மாட்டுத்தொழுவில் இருந்த தகர செட்டின் மழைநீர் வடிவதற்காக 3 அடி இடம் விட்டு சுவர் கட்டப்பட்டது என்றால் சரியல்ல.

4. சுவருக்கு அடுத்து 3 அடி இடம் விட்டு தான் எனது இடம் தொடங்குகிறது என்றால் சரியல்ல, சுவர்முடிந்தவுடனே தொடங்குகிறது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் PN கீழ்பக்கமுள்ள இடங்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ல் MLHC பகுதிகள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

5. எனது கட்சிப்படி எனது தென்வடல் அளவு நான் குறிப்பிடாமல் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. புல எண்.383/8 ல் உள்ள பொதுநடைபாதைக்காக தான் கட்சி செய்கிறேன்.

6. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 ஆவணங்கள் பி.வா.சா.ஆ.4 ல் எங்கு உள்ளது என்று என்னால் குறிப்பிட்டு காண்பிக்க முடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் பி.வா.சா.ஆ.4 ல் EF பகுதிக்கு தெற்கே உள்ளது.

நீதிமன்ற கேள்வி – பி.வா.சா.ஆ.4 ஆவணம் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் பி.வா.சா.ஆ 4 வரைபடத்தில் கண்ட GHCD இடத்திற்கு கீழ்பக்கமுள்ள இடத்தை குறிக்கிறது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் பி.வா.சா.ஆ 4 வரைபடத்தில் கண்ட IONJ இடத்தை குறிக்கிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி